செ.வெ.எண்: 09 நாள்: 03.12.2016

# தமிழகஅரசு மாற்றுத்திறனாளிகளின் வாழ்வினை மேம்படுத்தும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பெருமிதம்.

புதுக்கோட்டை நகராட்சி, சத்தியமூர்த்திநகரில் உள்ள மஹாராஜ் திருமண மண்டபத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, புதுக்கோட்டை மாவட்டம் சார்பில் அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தின விழா 2016 மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர்.ஜெ.லோகநாதன்,இ.கா.ப., அவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (03.12.2016) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் மற்றும் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி பேசியதாவது:

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர்-3ம் நாள் உலக மாற்றுத்திறனாளிகள் தினம் அனுசரிக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் தமிழக அரசு மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் புதுக்கோட்டை நகராட்சி, சத்தியமூர்த்தி நகரில் உள்ள மஹாராஜ் திருமண மண்டபத்தில் உலக மாற்றுத்திறனாளிகள் தினம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதில் மாற்றுத்திறனாளிகளுக்கென மாவட்ட அளவிலான விளையாட்டுப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு பரிசுகள் மற்றும் பதக்கங்கள் வழங்கப்பட்டதுடன் இன்றைய நிகழ்ச்சியில் பங்கேற்று பல்வேறு கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது.

மேலும் 5 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.27500 மதிப்பில் மடக்கு சக்கர நாற்காலிகளும், 2 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.8000 மதிப்பில் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்களும், 40 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.12 இலட்சம் மதிப்பில் காதுக்கு பின்னால் அணியும் காதொலிக்கருவிகளும் என மொத்தம் 47 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1235500 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. தமிழகஅரசு காதுகேளாத மாற்றுத்திறனாளிகளுக்கு மீண்டும் கேட்கும் திறன் வரும் வகையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீடு திட்டத்தின் கீழ் ரூ.8 இலட்சம் வரையிலும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது. இந்த அறுவை சிகிச்சை மூலம் நமது மாவட்டத்தை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1500 மாதாந்திர உதவித்தொகை வழங்கப்பட்டு வருவதுடன் வருவாய்த்துறையின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர உதவித்தொகை ரூ.500 லிருந்து தற்பொழுது ரூ.1000 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் நமது மாவட்டத்தில் ஒவ்வொரு மாதமும் 6000 மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகையினை பெற்று வருகின்றனர். அனைத்து மாற்றுத்திறனாளிகளும் பயன்பெறும் வகையில் உதவித்தொகை பெறும் உடல் ஊனத்தின் அளவு 60 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழகஅரசு மாற்றுத்திறனாளிகளின் வாழ்வினை மேம்படுத்தும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆ.ப., மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.பூ.சரவணக்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சாந்தி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திருமதி.சூரியகலா, மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.ரேணுகா, மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு.வாஞ்சிநாதன், இளநிலை மறுவாழ்வு அலுவலர் திரு.வசந்தராமக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**